தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 24 | மே 2024 | கனி 6



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

MONTHLY
THE WORD OF CHRIST


1

ஆசிரியர்
B. அர்ஜூனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 53
தலைப்பு : முழங்கால்படியிடுதல் – Kneeling down
வேத வாசிப்பு : ஏசா.45:23

1. முழங்கால் யாவும் எனக்கு முன்பாக - ஏசா.45:23
2. இயேசு: முழங்கால்படியிட்டு - லூக்.22:41.42
3. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் - பிலி.2:9-11

மாத இதழுக்கான
சந்தா செலுத்த மூன்று வழிகள்

**G-Pay & PhonePe - 9443558041**



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



**JOIN OUR**
**WORLD EVANGELISM**
**BIBLE SCHOOL**
**RIGHT NOW**



**The Word of Christ**
**Canara Bank A/c No.0946201000552**
**IFSC:CNRB0000946**
**Branch Batlagundu**

Contact Us: 6379350509


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

**Our TV Program: Six Days of the Week**

*Every Monday, Tuesday &*
*Wednesday 6.00 P.M on Joy TV*
*Every Thursday, Friday &*
*Saturday 6.00 P.M on Heaven TV*

YouTube : the word of christ




## THE WORD OF CHRIST

**Monthly Magazine**

Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**மாத இதழின் உள்ளே...**

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 மே -2024 கனி - 6


**ஆசிரியருரை**

## இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்
## Pray Without Ceasing



**ஜெபம்**, நாம் தேவனோடு தொடர்புகொள்ளுவதற்கான வழியாக இருக்கிறது. ஜெபத்தை இயேசுவின் மூலமாக ஜெபிக்கிறோம். அதாவது இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் கேட்கிறோம். ஏனெனில் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை பெற்றுக்கொள்வீர்கள் என்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறபடியால் நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். அநேகர் இயேசுவை நோக்கி சிலவேளைகளில் ஜெபிக்கின்றனர். அப்படிஜெபிக்கும்போது நாம் இயேசுவானவர் சொன்னபடி ஜெபிக்க தவறிவிடுகிறோம். மேலும் நாம் ஜெபித்தும் அதனுடைய பலனைஅடையாமற்போகின்றோம். இயேசுவானவர் பிதாவைநோக்கி ஜெபிக்கும்போது; தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: "பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளி யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்றார் (யோவா.17:2). "இப்பொழுதும் நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்" என்று ஜெபித்தார் (யோவா.17:13). இந்த ஜெபத்தில் தான் எங்கிருந்து வந்தாரோ அந்த இடத்துக்கு மீண்டும் போவதற்காக தம்மை அனுப்பின பிதாவானவரை நோக்கி ஜெபிக்கிறார். அதுமட்டுமல்ல, அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன் என்று ஜெபித்தார். அவர் அடைந்த சந்தோஷத்தை நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டும் என்பதுவே இயேசுவானவருடைய ஜெபமாக இருந்தது. அவர் எப்படி ஜெபித்தாரோ அப்படியே நாமும் தேவனுடைய குமாரர்களாக இருப்பதால் நாம் தேவனை நோக்கி இயேசுவின் நாமத்தில் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் சமாதானமில்லை, சந்தோஷம் இல்லை என்று எங்கும்பேசப்படுகிறதை நாம் கேள்விப்படுகிறோம். மனிதன் தேவனைவிட்டு வெகுதூரம் கடந்துசென்றுவிட்டான். அவனை பாவம் அவ்விதமாக கொண்டு சென்றுவிட்டது. அவன் மறுபடியும் மனந்திரும்பவேண்டும் என தேவன்

எதிர்பார்க்கிறார். அவன் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கு என்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது கர்த்தர் அவனை மன்னித்து தம்முடைய மந்தையில் சேர்க்கிறார். அவன் நிறைவான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளுகிறான். இதற்காகவே இயேசுவானவர் பூமியில் இருக்கும்போது தாம் தேவனோடு கொண்டுள்ள உறவைப்போல ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் தம்முடைய சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி வேண்டுவதாக சொல்லுகிறார். அவர் பூமியில் இருக்கும்போது ஏதோ நினைத்தபோது ஜெபிக்கவில்லை. அவருடைய முப்பத்துமூன்றரை வருடங்களில் அதிகமாக ஜெபத்திலே தேவனோடு தரித்திருந்தார். இடைவிடாமல் ஜெபிக்கிறவராயிருந்தார். வருடத்திற்கு ஒரு முறை ஜெபிக்கிறவர்கள் உண்டு. சிலர் மாதத்திற்கு ஒரு முறை சபைக்குச் சென்று ஜெபிக்கிறவர்கள் உண்டு. இன்னும் சிலர் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே ஜெபிக்கிறவர்களாகவும் காணப்படுகிறார்கள். இது இடைவிடாமல் ஜெபிப்பதை குறிக்காது.

யோனா என்ற தீர்க்கதரிசியை அறிவீர்கள் அவன் ஜெபிக்கும்போது; "என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன் நீர் என் சத்தத்தைக் கேட்டீர்" என்று ஜெபித்தான் (யோனா2:2). இவன் ஜெபிக்கின்ற வேளையில் மீன்வயிற்றில் இருந்தான். மீன் யோனாவை மூன்று நாள் வரை தன் வயிற்றில் வைத்திருந்தது. கடல் ஆழங்களில் அவனைக் கொண்டு சென்றிருக்கும். அநேகர் நெருக்கத்தில் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். அவர் என்னை மறந்தார் ஆகையால் நான் இன்று சபைக்கு செல்லவில்லை. என் தேவைகளை கர்த்தர் சந்திக்கவில்லை அல்லது நான் எதிர்பார்த்த காரியம் கைகூடிவரவில்லை இப்படிப்பட்ட அநேக சாக்குபோக்கான காரியங்களைச் சொல்லி கர்த்தரை மறக்கிற ஜனங்களைப் பார்க்கிறோம். யோனாவோ, நெருக்கத்திலும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டதாக சொல்லுகிறான்.

மோசே என்ற தேவனுடைய மனுஷன் "நாங்கள் எங்கள் வாழ் நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்" என்பதாய் ஜெபிக்கிறான் (சங்.90:14). மோசே தேவனுடைய ஜனங்களோடேகூட துன்பத்தை அநுபவிக்கும்படி எகிப்தின் பொக்கிஷங்களை விட்டு வந்த மனுஷன். வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழக்கூடிய சந்தோஷத்தை கர்த்தர் ஒருவரே கொடுக்க முடியும். இதை அறிந்த மோசே காலையில் எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும் என்று சொல்லி ஜெபித்தான். ஒவ்வொரு நாளும் நாம் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். சிலர் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று சொல்லிக்கொண்டே இருந்தால்தான் இடைவிடாமல் ஜெபிப்பதாக கருதுகிறார்கள். அப்படியல்ல இடைவிடாமல் என்பது தொடர்ந்து ஒரு நாளைக்கு பல முறை ஜெபிப்பது. இது இடைவிடாமல் ஜெபிப்பதைக்குறிக்கும். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு ஒலிவமலைக்கும், கெத்சமனே தோட்டத்திற்கும் அதிகமாக ஜெபிக்கும்படியாக சென்றுள்ளதை நாம் வேதத்தில் காணமுடிகிறது அவ்விதமாக நீங்களும் பலமுறை ஜெபிக்கும்படியாக தினமும் முயற்சி எடுங்கள். அதினால் தேவனாடு சஞ்சரிக்கும் பாக்கியத்தை பெறுவீர்கள்.

ஜெபம் அது விசுவாசமுள்ள ஜெபமாக இருக்கவேண்டும். யாக்கோபு என்ற தேவனுடைய மனுஷன் எழுதிய வேத புத்தகத்தில் படிக்கிறோம்;

"விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" என வாசிக்கிறோம் (யாக்.5:15). விசுவாசமுள்ள எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். அப்படிப்பட்டவனுடைய ஜெபம் நோயாளியையும் சுகம் ஆக்கக்கூடியதாக இருக்கிறது. அவனுடைய ஜெபத்தைக்கேட்டு தேவன் பிணியாளியை காப்பாற்றுகிறார். பேதுரு, பவுல் போன்றோர் ஜெபித்தபோது அநேகர் சுகமாக்கப்பட்டுள்ளதை நாம் அப்போஸ்தலர் புத்தகத்தில் படிக்கிறோம். சபையின் மூப்பர்கள் விசுவாசிகளுக்காக ஜெபிக்கவேண்டும் என்று காண்கிறோம். ஏனெனில் அவர்கள் மந்தையின் கண்காணிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மந்தையின்மீது கவனம்வேண்டும். விசுவாசமுள்ள மூப்பர்களை சபையில் அவசியம் நியமிக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களுடைய ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார்.

ஜெபிக்கும்போது சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை நோக்கி சொல்லும்போது; "நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக் குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார்" (லூக்.22:46). அவர்களோ நித்திரையின் ஆவியினால் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அநேகரை பிசாசு இந்தவிதமான ஆவியினால் சோரப்பண்ணுகிறான். பைபிளை எடுத்தவுடன் அநேகருக்கு தூக்கம் வந்துவிடுகிறது. உடனே பைபிளை மூடிவைத்துவிட்டு நித்திரைக்குச் சென்று விடுகின்றனர். மீண்டும் மறுநாள் பைபிளை எடுத்தவுடன் தூக்கம் வருகிறது, நித்திரைக்கு சென்று விடுகின்றனர். ஆனால் டிவியை விடிய விடிய பார்த்தாலும் தூக்கம் வருவதில்லை. ஏனென்றால் அதனுடைய காட்சிகள் அவர்களை அப்படியே ஈர்த்து விடுகிறது. இவ்விதமாக அநேகர் சோதனைக்குள்ளாக தள்ளப்படுகின்றனர். நாம் எந்த அளவு ஜெபத்தில் தரித்திருக்கிறோமோ அந்த அளவு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். ஜெபம் கடல் கடந்து இருக்கிறவர்களைக்கூட இரட்சிக்கும். நமக்கு வரக்கூடிய நித்திரையோ அருகாமையில் உள்ளவர்களைக்கூட காப்பாற்றாது. ஆகையால் விழித்திருந்து ஜெபியுங்கள்.

இடைவிடாமல் ஜெபித்தவர்களைக்குறித்து வேதாகமத்தில் படிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் அதில் ஒருவர். அவர் எபேசு சபைக்கு எழுதும்போது; "இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து" என எழுதுகிறான் (எபே.1:16). அவன் எபேசிய கிறிஸ்தவர்களை நினைக்கும்போதெல்லாம் அவர்களுக்காக இடைவிடாது ஜெபித்திருக்கிறான். நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்காக, அல்லது உங்களை வழிநடத்துகிறவர்களுக்காக இடைவிடாது ஜெபித்திருக்கிறீர்களா? எங்களோடு சேர்ந்து ஊழியத்தில் பங்குகொள்ளும் ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் ஒருமுறை எங்களுக்கு கடிதம் எழுதினபோது நாங்கள் ஒவ்வொருநாளும் எங்களுடைய ஜெபத்தில் உங்களை நினைத்து ஜெபிக்கிறோம் என்று எழுதியிருந்தார். அநேக சகோதரர்கள் எங்களுக்கு உண்டு ஆனாலும் இவ்விதமாக சொன்னவர்கள் இவர்கள் மட்டுமே. அந்த கடிதத்தை படித்தவுடன் நமக்காக வேண்டுதல் செய்யக்கூடியவர்களை தேவன் ஏற்படுத்தியிருக்கிறாரே என்று சந்தோஷம் அடைந்தோம். நாங்களும் அவர்களுக்காக ஜெபிக்கிறோம். அதை நீங்கள் ஒவ்வொருநாளும் செய்யவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் இன்றே

உங்களுடைய ஜெப வாழ்க்கையை துவக்குங்கள். கர்த்தர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார்.

தானியேல் என்ற தேவனுடைய மனுஷன் ஒவ்வொரு நாளும் மூன்று முறை ஜெபித்திருக்கிறான் என்று படிக்கிறோம். "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" எனக் காண்கிறோம் (தானி.6:10). அந்நாட்களில் ராஜாவைத் தவிர எவரையும் நோக்கிப்பார்க்கக்கூடாது என்று பத்திரத்தில் கையொப்பம் வைக்கப்பட்டுள்ளது அதை மீறி தானியேல் ஜெபித்தார். அதினால் அவரைத் தூக்கி சிங்கங்களின் கெபியில் போட்டார்கள். அந்த சிங்கங்கள் அவரை கடிக்கவில்லை. தேவன் அவைகளின் வாய்களைக் கட்டிப்போட்டார். தானியேல் இடைவிடாமல் ஜெபித்த தாசன். அவனை பிதாவாகிய தேவன் காப்பாற்றினார். அவன் கர்த்தருக்காக வைராக்கியமுள்ள தேவமனுஷனாக வாழ்ந்தான். இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. மற்றவர்களுக்காக பயந்துபோய் சபைக்கு செல்லாமல், ஜெபிக்காமல் மற்றவர்களைப் பிரியப்படுத்தும்படியாக வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்களா? அந்த வாழ்க்கை உங்களை இரட்சிக்காது. இடைவிடாது ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாட்டிற்காக, அனைத்து ஜனங்களுக்காக, ஒவ்வொருநாளும் மருத்துவமனையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நோயாளிகளுக்காக, சிறைச்சாலையில் துன்பத்தை அநுபவிக்கும் கைதிகளுக்காக இன்னும் இதைப்போல யாவருக்காகவும் ஜெபிக்க கடனாளிகளாக இருக்கிறோம். தொடர்ந்து இடைவிடாது ஜெபியுங்கள்.

**தானியேலைப்போல ஒரு நாளைக்கு மூன்று முறை ஜெபித்தால் மட்டும் போதுமா?**

தானியேல் தினமும் மூன்றுவேளை தான் செய்து வந்தபடியே ஜெபித்தான் என படிக்கிறோம். அதற்காக அவனைப்போலவே மூன்று வேளை மட்டும் ஜெபித்தால் போதும் என்று நினைக்கக்கூடாது. அவருடைய நாட்களில் அது போதுமானதாக இருந்திருக்கலாம் ஆகையால் அவன் மூன்று முறை மட்டுமே ஜெபித்தான். ஒருவேளை அவன் இன்று இருப்பாரானால் இன்றை உலகத்தைப்பார்த்து ஆண்டவர் இயேசுவைப்போல எப்பொழுதும் ஜெபிக்கிறவனாக இருந்திருப்பான். ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே உன்னை முழுவதுமாக தேவனுடைய சமுகத்தில் ஊற்றி ஜெபி.அநேகர் ஏதோ ஜெபிக்கவேண்டும் என்பதற்காக ஜெபிப்பார்கள். சிலர் ஜெபத்தை முடிக்காமல் இழுத்துக்கொண்டே போகின்றாரே என்று முணுமுணுத்துக்கொண்டிருப்பார்கள். இவ்விதமாக சங்கடத்தோடும், அதற்குரிய மகிமையைச் செலுத்தாமல் ஒருமனமில்லாமல் ஜெபத்தில் கலந்துகொண்டிருப்பதினால் எந்தவிதமான பயனுமில்லை. ஒருமனப்பட்டவர்களாக ஜெபிக்கவேண்டும். அந்த ஜெபம் மிகவும் பெலனுள்ளதாக இருக்கிறது. எஸ்தர் தன்னுடைய தாதிமார்களோடு உபவாசித்து ஜெபித்தாள். யூதர்களுக்கு விடுதலை கிடைத்தது. கானானிய ஸ்திரீ கர்த்தரை விடாது பற்றிக்கொண்டு வேண்டினாள், அவளுடைய மகள் சுகமானாள் நீங்களும் அவ்விதமாக ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# நாம் ஏன் வாரத்தின் முதல் நாளிலே கூடுகிறோம்?

Why We Meet On The First Day of the Week?

*J.C.Choate*



கர்த்தருடைய சபை அங்கத்தினர்களும் கிறிஸ்தவர்களுமாகிய நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என வேதாகமம் போதிக்கிறது (யோவா.4:24). நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டு உண்மையோடு ஆராதிக்க வேண்டுமென்பது இதன் பொருள். மேலும் நாம் இதை கர்த்தருடைய வார்த்தையின்படி செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் வினாவானது: நாம் அதை எப்பொழுது செய்ய வேண்டும்? மேலும் எப்படிச் செய்ய வேண்டும்? வெள்ளி, சனி ஞாயிறு அல்லது வாரத்தின் வேறு நாட்களில் அதைச்செய்ய வேண்டுமா? ஆராதிக்கும்படி நாம் கூடிவருவது உண்மையாகவே முக்கியமான காரியமா?

பழைய ஏற்பாடு முழுமையும் நாம் வாசிக்கையில் தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் ஓய்வு நாளை நினைவுகூரவும் அதைப் பரிசுத்தமாய் ஆசாரிக்கவும் வேண்டுமென கேட்டுக்கொண்டாரென நாம் பார்க்கிறோம். இது பத்துக்கட்டளைகளில் ஒன்று (யாத்.20:8-11). ஆனால் நாம் கிறிஸ்துவின் நாட்களுக்கு வரும் போது, கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் பழைய கட்டளையை அல்லது தேவனுடைய ஜனங்கள் ஓய்வு நாளை அநுசரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட கட்டளையை எடுத்துப்போட்டார் என நாம் கற்றுக்கொள்கிறோம் (யோவா.1:17, கொலோ.2:14; எபி.9:15-17). ஆனபடியால், பழைய கட்டளை நீக்கப்பட்டபோது, அது புதிய கட்டளையால் அப்புறப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்வு உண்மையானது. ஓய்வு நாள் கட்டுப்படுத்தப்படும்படிக்கு ஒழிந்தது, அந்த சமயத்தில் தானே, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் ஆராதனை செய்யும் நோக்கத்தில் கூடி வரும்படி ஒரு புதிய நாளை அறிமுகப்படுத்தினார். அந்த நாள் வாரத்தின் முதல் நாளாகும். அதன் படியே ஓய்வு நாள் சனிக்கிழமையில் வந்தது அல்லது வாரத்தின் ஏழாம் நாளில் வந்தது ஆனால் இப்பொழுது அவர் ஆராதனையில் கிறிஸ்துவை முதன்மையாகவும் மற்ற எல்லாவற்றிலும் மேலானதாகவும் வைக்கும்படி நம்மை எதிர்பார்க்கிறார்.

வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டு பகுதி வாரத்தின் முதல் நாளைப்பற்றிச் சொல்லுவதற்கு அதிகமான ஆதாரங்களைக் கொண்டிருக்கிறது நாம் இப்பொழுது இந்த நாள் ஏன் மிக முக்கியமானது, மேலும் நாம் ஆராதிக்கும்படிக்கு ஏன் வாரத்தின் முதல் நாளில் கூடிவரவேண்டும் என்பதற்கு பல காரணங்களைக் குறிப்பிடுவதற்கு நேரம் எடுத்துக்கொள்வோம்.

முதலாவது, கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் உயிரோடெழுப்பப்பட்டார், ஓய்வுநாள் வாரத்தின் பரிசுத்த நாளாக இன்னுமிருந்தால் அல்லது தேவனுடைய ஜனங்கள் ஆராதிக்கும்படி இன்னும் கூடிவரவேண்டுமென்று இருந்தால், பின் ஏன்

கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் அல்லது ஞாயிற்றுக் கிழமையில் எழுப்பப்பட்டார்? ஓய்வுநாள் ஒரு பரிசுத்தமான நாளாய் இருந்தபடியினால் அந்த நாளில் அவர் உயிரோடெழுப்பப்படாததற்குக் காரணமென்ன என நிச்சயமாக விவாதிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்குமானால், கல்லறையிலிருந்து கிறிஸ்து எழுந்த அந்தநாள் எவ்வளவு அதிகப்பரிசுத்தமாயிருந்திருக்கும்? உண்மையாகவே, அந்த நாள் ஆராதனைக்குரிய புதிய நாளாக இருக்கும்படிக்கே அந்த நாளை முக்கியப்படுத்தும்படிக்கு கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் எழுந்தார். நாம் மத்.28:1க்கு திரும்புகையில், நாம் வாசிக்கலாம், "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்". தொடர்ந்து வாசிக்கையில், அந்த நாளில் கர்த்தர் உயிரோடெழுப்பப்பட்டிருந்ததைப் பற்றி அறிவுறுத்தப்படுகிறோம். நாம் இதே காரியத்தை மாற்கு 16:1,2லும் அதைப்போல லூக்.24:1,2 மற்றும் கடைசியாக யோவா.20:1-லும் வாசிக்கிறோம்.

இரண்டாவது, வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து கிறிஸ்து உயிரோடெழுப்பப்பட்ட பின்பு அவர் தம்முடைய சீஷர்களைச் சந்திக்க இரு வேறு சூழ் நிலைகளைப் பொருத்தமானதாகக் கண்டார். இரு நிகழ்வுகளுமே வாரத்தின் முதல் நாளிலே நடைபெற்றாகச் சொல்லப்படுகிறது........நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார் அவர் இப்படிச்சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவா.20:19,20). மீண்டும் வாசிக்கிறோம், "மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது, அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:26-29). இப்பொழுது இயேசு வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து, அந்த நாள் சாயங்காலத்தில் சீஷர்களுக்குத் தரிசனமாகி, எட்டுநாட்களுக்குப் பிறகு மீண்டும் சீஷர்களுக்குத் தரிசனமாகி இருந்தாரென்றால், அவர் மீண்டும் அவர்களை வாரத்தின் முதல் நாளிலே சந்தித்தார் என அர்த்தமாகாதா? வாரத்தின் முதல் நாள் சிறப்பம்சத்தை பெற்றிருக்கவில்லையென்றால் இந்த அனைத்து சம்பவங்களும் வாரத்தின் முதல் நாளிலே நடந்தேறியதென வேதவாக்கியங்கள் அறிவுறுத்துகின்றன என்று இது புதியதாகத் தோன்றவில்லையா? எப்படியாகிலும்

இயேசு வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து இருவேறு சூழ்நிலைகளிலும் வாரத்தின் முதல் நாளிலே அவர் சீஷர்களை சந்தித்தார் என இந்த நிகழ்ச்சிக்கு ஒரு பெரிய சிறப்பம்சம் இணைந்ததென்று நான் உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறேன்.

மூன்றாவது, பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாளில் வந்தது, பஸ்காவிற்குப் பின் ஐம்பதாவது நாள் அது. அப்போஸ்தலர் 2-ன்படி அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவியை அனுப்பும்படிக்கும், முதன்முறையாக சுவிசேஷம் அந்த நேரத்தில் பிரசங்கிக்கப்படும்படிக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரட்சிக்கப்படும்படிக்கு என்னசெய்யவேண்டுமென சொல்லும்படிக்கும், அந்தநாளில் சபை ஸ்தாபிக்கப்படும்படிக்கும் கர்த்தர் இந்த நாளைத் தெரிந்துகொண்டாரென அர்த்தமாகிறது. இப்பொழுது வாரத்தின் முதல் நாளில் ஒரு சிறப்பு முக்கியத்துவம் இடம்பெறவில்லையென்றால், என்ன நடந்திருக்கும்? வாரத்தின் மற்ற நாட்களுக்கும் மேலான நாளாக இந்த நாள் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு ஏதோ, சிறப்பான காரணம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டுமென்பது மிக உண்மை. உதாரணமாக, ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தால், பின் ஏன் கர்த்தர் பின்வரக்கூடிய நாளுக்குப் பதிலாக அந்த நாளை அனுசரிக்கும்படி தெரிந்து கொள்ளவில்லை? ஆராதிக்கும்படியான நாளான வாரத்தின் முதல் நாளினால் அந்த ஓய்வு நாள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் கிறிஸ்தவர்களின் காலத்தில் பழையநிலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

நான்காவது, தேவனை ஆராதிக்கும்படி ஆதி கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்ததற்கு நாம் ஓர் உதாரணத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் வாசிக்கிறோம், “வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்” (அப்.20:7) என வாசிக்கிறோம். நாம் இந்தக் குறிப்பை கவனிக்கையில் பவுலும் மற்றவர்களும் வாரத்தின் முதல் நாளிலே சபையோடுகூட கூடிவரும்படிக்கு கப்பல் ஏறி பிலிப்பு பட்டணத்தை விட்டு துரோவாபட்டணத்துக்கு வந்து, அங்கே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள் என அறிவுறுத்தப்படுகிறோம். இதன் மூலம் நாம் திட்டமாக காணமுடியும் அதாவது ஏழாம் நாள் அல்லது மற்ற நாள் ஆராதனை நாளாயிருந்திருக்குமானால், அவர்கள் தங்கள் கூட்டத்தோடுகூட அங்கிருந்த கிறிஸ்தவர்களுடன் ஆராதனையை நடத்தியிருந்திருக்கலாம் அதன்பின் தங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்திருந்திருக்கலாம். மாறாக, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி நியமித்திருந்த அந்த நாளில் ஆராதிக்க வேண்டுமென வாரத்தின் முதல் நாள் வரும்வரைக்கு அவர்கள் காத்திருந்தார்கள். அதன் பின் எந்த நாளில் என்ன நடந்தது? அந்த காரியத்திற்காக சீஷர்கள் அந்த நாளில் கூடி வந்தார்கள். ஏன் அவர்கள் கூடிவந்தார்கள்? அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என வேதம் கூறுகிறது. மேலும் அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு கர்த்தருடைய பந்தியில்

பங்குகொள்ளும்படி கூடி வந்தார்களென இந்நிகழ்ச்சிக்கு ஆதாரத்தைக் கொண்டிருக்கிறது (1கொரி.11:23-29). அதன் பொருள், வேதாகம உதாரணத்தின் மூலம், கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படி கூடிவந்த நாள் வாரத்தின் எந்த முதல் நாள்? நிச்சயமாக வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளே. ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாக இருந்த பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குத் திரும்புங்கள், தேவன் ஒவ்வொரு ஓய்வுநாளையும் அவர்கள் நினைவுகூரும்படி சொல்லவில்லை, ஆனால் ஓய்வு நாளை நினைவுகூரும்படி மாத்திரம் சொன்னார். அவர்களுக்கு அந்த நாளை நினைவுகூரவேண்டுமென்பது அவர்கள் எல்லாவற்றையும் அல்லது ஒவ்வொரு ஓய்வுநாளையும் நினைவுகூரவேண்டுமென்பதாகும்.

வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வது பற்றிய விஷயத்தில் இதே காரியம் உண்மையே. அந்த கூட்டத்தில் அவர்கள் சில போதனைகளைப் பெற்றிருந்தார்கள். வேதவாக்கியம் பவுல் போதித்தார் எனவும் தன்னுடைய போதனையை நடுராத்திரிவரை தொடர்ந்தார் எனவும் கூறுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் அல்லது பாடல் பாடுவதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ மேலும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ இது சொல்ல வில்லை. ஆனால் பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் அந்த நாளில் கூடி வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்டு தேவனை ஆராதித்தார்கள். அப்படியென்றால் நாம் கிறிஸ்தவர்களாயிருந்தால், நாமும் அதே காரியத்தைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம் என்றே பொருள்படுகிறது.

ஐந்தாவதாக, பவுல் தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே ஏதாகிலும் சேர்த்துவைக்க வேண்டும் அல்லது தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டுமென அங்கே கட்டளையிட்டான் என வாசிக்கிறோம். “பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக் கடவன்” (1கொரி.16:1,2) என்று கூறுவதாக வாசிக்கிறோம். இங்கே கலாத்தியா மற்றும் கொரிந்துவிலிருந்த இரு சபைகளுக்கு வாரத்தின் முதல் நாள்தோறும் கொடுக்க அல்லது சேர்த்துவைக்கும்படி அறிவுறுத்தியிருக்கிறான். கொடுக்கும் மனநிலையைப் பற்றியும், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும், கொடுக்கும் நோக்கத்தைப் பற்றிச்சொல்லுவதற்கு அதிகமதிகமான ஆதாரங்கள் உண்டு, ஆனால் கொடுக்கும் செயல் வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது என்று இங்கே நாம் காண வேண்டியது முக்கியமான காரியமாகும். ஆச்சரியம் மற்ற நாளில் கொடுப்பதற்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளில் செய்யப்படவேண்டியது ஏன்? ஏனென்றால் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படி கூடிவரவேண்டிய வேதாகமத்தின் நாளானது இந்நாளே என்பது தெளிவாயிருக்கிறது. மேலும் அவர்கள் கூடிவந்திருந்த சமயத்தில், தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுப்பதற்கு அது ஒரு சிறந்த நாளாகவும் இருந்திருக்கும்.

அதே காரியம் தான் இன்றும் நடக்கிறது. இவையெல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல, வாரத்தின் முதல் நாள் ஒரு பரிசுத்த நாளல்ல, ஓய்வுநாள் அநுசரிக்கப்பட்டது போல அது ஒரு ஓய்வுநாளல்ல, நிச்சயமாக இது ஓய்வுநாளல்ல, ஆனால் இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் மகிமைப்படுத்தப்பட்ட நாள் மேலும் பரிசுத்த ஆவியின் வருகைக்கென்றும், முதல் முறையாக உண்மையிலே சுவிசேஷம் போதிக்கப்படுவதற்கென்றும் மேலும் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கென்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நாள் இது. இது மாத்திரமல்ல, இந்த நாள் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி தெரிந்தெடுத்த நாளாயிருந்தது.

இப்படியிருக்கிறபடியினால் இது ஆராதனைக்குரிய வேதாகம நாள். நாம் புதியஏற்பாட்டில் வைக்கப்பட்டுள்ள திருஷ்டாந்தங்களைப் பின்பற்றவும், தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரும்படிக்கும் தவறிழைக்கமாட்டோம். தவறு அந்தநாளில் கூடிவருவதை புறக்கணிக்கச் செய்யும். எபிரெய எழுத்தர் சபை கூடிவருதலை விட்டு விலகக்கூடாதென்று நம்மை உற்சாகப்படுத்துகிறார் (எபி.10:25). இது கிறிஸ்தவர்களாயிருக்கிற நமக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடிவரும் சந்தர்ப்பத்தோடே மகிமைப்படுத்தவும் அந்த நாளில் ஆராதிப்பதின் மூலம் நமது கர்த்தரை துதிக்கவும் அவர் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற இந்த நோக்கம் எவ்வளவு அற்புதமானது!

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக மற்ற கிறிஸ்தவர்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசிக்கவும், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் நாங்கள் ஜெபிக்கிறோம். இதை நீங்கள் செய்வீர்களென்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார். அப்போஸ்தலர் 2 ஐ வாசித்துப்பாருங்கள் அவர்கள் அதைச் செய்தார்களென்றால். நீங்கள் அதைச் செய்யவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

## நடப்புச் செய்திகள்

■ பூமியின் நீர் ஆதாரத்தை கண்டறிய ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகள், பூமிக்கு அடியில் 700 கி.மீ ஆழத்தில் ராட்சத கடல் ஒன்றை கண்டுபிடித்தது பெரும் ஆச்சரியத்தை எற்படுத்தியுள்ளது.

■ இந்தியாவில் மக்களவைத் தேர்தலில் 96.9 கோடி மக்கள் வாக்களிக்க தகுதியானவர்கள்

■ 3 மாடலில் வந்தே பாரத் ரயில்

நன்றி - NewsPoint

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல்; ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திசொல்லவேண்டும்" - எபிரெயர் 10:25

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

Bible Characters

41



## பரிசுத்த வேதாகமத்தில் எஸ்தர்
## Esther In The Holy Bible

1. இந்து தேசம் முதல் எத்தியோப்பிய தேசம் வரைக்கும் 127 நாடுகளை அரசாண்ட அகாஸ்வேரு நாட்களில் - எஸ்தர் 1:1
2. மொர்தெகாயின் சிறிய தகப்பன் குமாரத்தி எஸ்தர் - எஸ்தர் 2:7
3. தாய் தகப்பன் இறந்தபடியால் தன் குமாரத்தியாக வளர்த்தான் இவளுக்கு மற்றொரு பெயர் அத்சாள் - எஸ்தர் 2:7
4. அகாஸ்வேரு ராஜா எஸ்தரை வஸ்தியின் ஸ்தானத்தில் பட்டத்து ஸ்திரீயாக்கினான் - எஸ்தர் 2:16
5. மொர்தெகாய் எஸ்தருக்கு அறிவித்து, அதை ராஜாவுக்கு தெரியப்படுத்தினாள் - எஸ்தர் 2:21
6. நான் செத்தாலும் சாகிறேன் என்றாள் - எஸ்தர்4:15
7. ஆமானை வீழ்த்த எஸ்தர் செய்த யுக்தி - எஸ்தர் 5:3
8. ராஜாவினிடத்தில் எஸ்தரின் மன்றாட்டு - எஸ்தர் 8:6
9. ராஜா எஸ்தரின் வேண்டுதலை கேட்டல் - எஸ்தர் 9:12
10. பூர் என்னும் சீட்டிலிருந்து பூரீம் பண்டிகை - எஸ்தர் 9:24

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***எஸ்தரின் தகப்பன் பெயர் என்ன?***

**விடை:** அபியாயேல் - "மொர்தெகாய் தனக்குக் குமாரத்தியாய் ஏற்றுக்கொண்டவளும், அவன் சிறியதகப்பனாகிய அபியாயேலின் குமாரத்தியுமான எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கிறதற்கு முறைவந்தபோது..." (எஸ்.2:15).



பு.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

Bible Characters

42



## பரிசுத்த வேதாகமத்தில் கொர்நேலியு
## Cornelius In The Holy Bible

1. இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாக இருந்தவன் - அப்.10:1
2. தேவபக்தியுள்ளவன் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவன் - அப்.10:2
3. தேவதூதன் தன்னிடத்தில் வர தரிசனம் கண்டவன் - அப்.10:3
4. அவனிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகன் தேவபக்தியுள்ளவன் - அப்.10:7
5. மூன்றுபேரை பேதுருவிடம் அனுப்பினான் அவர்களில் 2பேர் தன் வீட்டுமனுஷர் - அப்.10:7
6. பேதுருவை சந்திக்க காத்திருந்தான் - அப்.10:22
7. பேதுருவின் பாதத்தில் விழுந்தான் அப்பொழுது பேதுரு நானும் ஒரு ஊழியக்காரன் தேவனைத் தொழுதுகொள் என்றான் - அப்.10:25
8. கொர்நேலியு வீட்டில் பேதுருவின் செய்தி - அப்.10:34
9. கொர்நேலியு வீட்டார் ஞானஸ்நானம் - அப்.10:48
10. சிலநாள் அங்கே தங்கும்படி பேதுருவை வேண்டிக்கொண்டார்கள் - அப்.10:48

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**கொர்நேலியுவை சந்திக்க தேவதூதன் வந்தது எப்படி?**

**விடை:** அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது - "உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது" (அப்.10:4).



பெண்கள் பகுதி

# தேவன் ஒருவர் இருக்கிறாரா?

# Is There A God?

-Betty



நான் காலையில் தேவப் பிரசன்னத்தின் உணர்வோடு எழுந்தேன். நான் தூங்கின போது அவர் தொடர்ந்து கவனமாய் பார்த்துக்கொண்டார் மேலும் அவருடைய முழுக்கவனத்தையும் எதிர்பார்த்த என் வாழ்க்கையின் எல்லா பாகங்களிலும் அன்பு செலுத்தி, பராமரித்து வந்தாரென என்னுடைய இருதயத்தின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தன.

சாத்தான் என் மூளையின் வழியாய் ஒரு எண்ணத்தை விதைக்கிறான். “நீ தேவனைப் பார்த்திருக்கவில்லை. ஒருவேளை அவர் இருந்தால், நாத்திகர் சொல்வது போல, உன் சிந்தையில் உதித்த ஒரு ஆதாரம் மட்டுமே. பிறகென்ன?

முழுமனதில் கபடில்லாதிருக்கவும் திறந்த மனதுடனிருக்கவும், நான் அந்த எண்ணத்தை பரிசோதிக்கிறேன். பிறகென்ன?

என் இருதயத்தில் வெறுமை உள்ளது. தேவனை நோக்கி நான் செலுத்தியிருந்த மனமார்ந்த அன்பு இதில் உலர்ந்துபோகிறது. பாதுகாப்பான என் உணர்வு மறைகிறது. நான் இதற்கு மேல் வாழ்விற்கான நங்கூரத்தையும் உறுதியையும் கொண்டிருக்கவில்லை. நான் மொத்தத்தில் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை.

என்னுடைய சிந்தையில் என்னைக் காட்டிலும் பெரிதானதொன்றுமில்லை, இன்றைய சரீர ஜீவியத்திற்குரிய தேவைகளைக் காட்டிலும் பெரிதான நோக்கமில்லை- ஏனென்றால் நாளை ஒருவேளை வராது, தொடுவானத்தில் நித்திய வாழ்வு இல்லை, - வெறுமை, அதன்பின் பயம் மற்றும் எனது மனதின் ஒவ்வொரு பிளவிலும் பயனற்ற வெள்ளம்.

இதைவிட தேவனில்லாமல், இது மிகக்கேட்டிலும் அதிகம் “ஒன்றும் மிஞ்சவில்லை”. இது, நான் இன்னும் வாழ்கிறேன் மேலும் உலகத்தின் எல்லா சவால்களும் இன்னும் வாழ்கின்றன மேலும் நான் எவ்வித உதவியையும் பெற்றிருக்கவில்லையென மரித்துப் போன நிகழ்வை ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் இந்த வாழ்வை நான் தைரியமாய் எதிர்த்து நிற்கிறேன். இந்த பீதியான நினைவை மாற்றுவதைக் காட்டிலும் பெரியது வேறொன்றுமில்லை. உன்னதமானவரிடத்தில் விசுவாசத்தை இழந்தவர்களுக்கு தொடுவானத்தில் தற்கொலை நேரிடக் காத்திருப்பதில்லை என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால் ஒரு உறுதியான எண்ணம் தனிமைபயத்தினை துளைத்துவிடுகிறது. “ஆம், நீ வாழ்ந்திடு உன்னைச் சுற்றியுள்ள வாழ்வின் எல்லா அதிசயங்களும் காண்கின்ற உலகத்தின் அதிசயங்களும் வாழ்கின்றன. ஒரு

கணவனின் இழப்பு அல்லது பெற்றோருடைய இழப்பு அல்லது ஒரு குழந்தை, நீ பார்த்திருப்பவற்றின் இழப்பு உன்னுடைய மிகப்பெரிய நாசமாயிருக்காது. நீ தேவனைக் கண்டிராத போது இழப்பது தான் மிகப்பெரிய நாசமாயிருக்கும். உன்னுடைய இருதயத்தில் இந்த நிகழ்வுகளின் பரிபூரணத்துவம் சாத்தானுடைய பரிகாசத்தோடும் சந்தேகத்தைத் தூண்டும் செயலோடும் பேசுகிறது. மனிதருடைய மனதில் கனவில் உதித்த ஒரு ஆதாரமாக மட்டும் தேவன் இருந்திருப்பாரானால், மனிதனது 'முன்னேற்றம்' மற்றும் 'உண்மையற்றசெயல்' போன்ற எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தேவனிலுள்ள பழைய வழக்கமான நம்பிக்கையை வளர்ச்சியடையப் பண்ணியிருக்காதா?

ஆனால் மனித சமுதாயத்தின் உள்ளான ஆத்துமா ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது (சங்.27:7-10). இன்றும்கூட, இரண்டு வகையான ஜனங்கள் உலகத்தில் இருக்கின்றனர்: விசுவாசிகளை விட தேவனை மறுதலிக்கிற உணர்வினையுடையவர்களும் (நடக்கையிலும் மனக்கிலேசத்திலும்) பிரச்சனை விகிதம் அதிகமுள்ள, தற்கொலை விகிதம் அதிகமுள்ள புள்ளிவிவரத்தை உடையவர்கள் சிலராக இருக்கின்றனர்.

இதற்கு எதிர் வரிசையில் உள்ளவர்கள் அநேகராகிய விசுவாசிகள். சிலரில் உருவாகிறது அல்லது வேறொன்றில், அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் பயபக்தியோடுகூடிய உணர்வோடு உண்மையாக ஒட்டிக்கொண்டுள்ளது. அவர்கள் தேவனைப் பற்றிய தங்களுடைய அறிவில் சத்தியத்திலிருந்து ஒரு கோடி மைல் தொலைவில் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவன் ஒருவர் உண்டு என உறுதியாயிருக்கிறது.

இருதிறத்தாருடைய மனதில், அடிப்படைகாரணி தேவனோடு இடைபடுகிறது! சில ஜனங்கள் மறுதலிக்கும் அவஸ்தையில் இருந்தபோதிலும் வேறெந்த ஒரு விஷயமும் இப்பேர்பட்ட தகுதியையும் ஒட்டுமொத்த முன் அனுபவத்தையும் உரிமை பராட்ட முடியாது இந்த உண்மை ஒன்றுமட்டுமே இறுதியாக பேசுகிறது. தேவன் இல்லாதிருந்தால், யாருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம், பெற்றோருக்கு காணாமல் போன ஒரு குழந்தையைப் போல யாரை நோக்கி நம்முடைய ஆவிகள் கதறுகிறது, இந்த பிரபஞ்சம் மற்றும் அவரிடத்திற்கு எட்டாத தொடர் தூரமும் பல வருடங்களாக இருந்துவருகின்ற யுகத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இன்னொரு எண்ணம் மனதிற்கு வருகிறது: ஏதோ சாத்தானை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவன் இருக்கின்றான் என்பது பற்றி சந்தேகமில்லை. ஏன்? முதல் காரணம்: பாவம் மற்றும் தீமையாக எப்பொழுதும் அவனுடைய கிரியைகளை சுற்றிலும் என்னால் காணமுடிகிறது. அதன் விளைவாக அழிவு தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறது. இரண்டாவது காரணம்: சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்ப்பைக்காட்டுவதில், தேவன் நம்முடைய எண்ணங்களின் மூலம் சாத்தான் தொடர்ச்சியாக இருக்கின்றான் என்பதைக் குறித்த சரமாரியான கேள்விகளையும் சந்தேகங்களையும் விவரிக்கிறதில்லை! தேவன், தாமே, சாத்தான், கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோ என்று பூமிமுழுவதும் சுற்றித்திரிகிறான் என நம்மிடம்

சொல்லுகிறார் (1பேது.5:8). தேவன் சாத்தானின் உண்மையான நிலையை அறிந்து நம்முடைய விசுவாசத்தை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறார் - ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர் - தேவன் நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்கும்படி விரும்புகிறார் அப்போது தான் நம்முடைய தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கும்.

சாத்தான் இருக்கின்றான் என்பதற்கு உலகத்தில் தீமையானது வினாவற்ற சாட்சியாக எங்குமிருக்கிறபடியினால், இக்காரணத்தினால் இதைப் பின்பற்றுகையில் இது அவித்துப்போடக்கூடாத நன்மையல்ல, மாறாக, தேவன் இருக்கின்றார் என்பதற்கும் ஆதாரமிருக்கிறதல்லவா? மேலும் சாத்தான் பொய்யுக்குப் பிதாவாயிருக்கிறான் என தேவன் நம்மை முன்னெச்சரிக்கிறபடியினால், தேவனுடைய எதிராளி தொடர்ந்து சந்தேகத்தைத் தூண்டுகிறவானாயிருப்பான் என நாம் எதிர்பார்ப்பதில்லையா? (யோவா.8:44)

“நான் தூங்கினபோது உம்முடைய ஜாக்கிரதையான பராமரிப்பிற்காகவும் என்னுடைய கண்விழிப்பின் போது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கைக்காகவும் உமக்கு நன்றி பிதாவே”

நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. ……நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்பிவிக்கத்தக்கவன் இல்லை……..” - ஏசா.43:11-13.

## "எத்தனை முறை நன்றி சொன்னாலும்"

உபத்திரவங்களினால் என் ஆத்துமா சோர்ந்து போகையில்
ஆதரவாக நான் சாய்ந்து கொள்ள இயேசுவின் "திருமார்பு இருக்கு"

வேதனையிலும் சோதனையிலும் நான் தளர்ந்து தள்ளாடி தடுமாறி விழ
ஏதுவாயிருக்கையில் என்னைத் தாங்கிப் பிடிக்க இயேசுவின் "திருக்கரங்கள் இருக்கு"

சமாதானத்தோடே அயர்ந்து நான் நித்திரை செய்ய;
தலையணையாக இயேசுவின் "திருமடி இருக்கு"

நன்மைகள் பெற்ற அனைத்திற்கும்
நன்றி சொல்ல இயேசுவின் "திருவடி" இருக்கு!

வேதம் சர்வவல்லவரின் சுவாசம்!
வேதவசனம் சர்வவல்லவரின் கவசம்!
எத்தனைமுறை நன்றி சொன்னாலும் மனம் நிறையவில்லை!
எத்தனைமுறை நன்றி சொல்ல மறந்தாலும் மன்னிக்கும் உமது பேரன்பு குறையவில்லை!
உண்ணவும் உடுக்கவும் போதுமென்றிரு, சுகபோகத்தை தேடாமல்;
இயேசுவினிடத்திலுள்ள மேலானவைகளையே தேடுங்கள்!
என் உயிர் உள்ள நாள் எல்லாம் இயேசுவின் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்!
இயேசு ஏற்படுத்திய சபையில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்! நான் மகிழ்ந்திருப்பேன்!

இயேசுவின் பணியில் அடியேன்,
K.S.மாணிக்கவாசகம்
திருச்சி

பெண்கள் பகுதி

# என் பிரியமே, உன்னில் பழுதொன்றுமில்லை

## My Darling, There is No Flow in You

*J.GloryArjunan*



அன்பு சகோதரியே, மணவாளன் தன் மணவாட்டியின் அழகை (உள்ளான அழகை) புகழ்ந்து கூறுவதே மேற்குறிப்பிடப்பட்ட தலைப்பு. இப்படி ஒரு கணவன் தன் மனைவியை நோக்கி: “என் பிரியமே, நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை” உன்.4:7 என்று கூறும் போது அந்த மனைவிக்கு எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும்! திருமணமான புதிதில் என் பிரியமே, “என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்தரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்” உன்.4:12 என்று கூறும் கணவன்மார்கள் நாளடைவில் ‘என் பிசாசே’ என்று கூறினால் அந்தமனைவிக்கு எத்தனை வேதனையாயிருக்கும்? இன்று அநேக மனைவிமார்கள் இவ்விதமாகவே வேதனைப்படுவதாக எங்களுக்குத் தெரியப்படுத்தி ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

சமீபத்தில் ஒரு நாள் ஓரிடத்தில் சகோதரிகள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தைகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன் சகோதரிகள் மிக ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் கண்ணீருடன் கவனித்துக்கொண்டிருந்தனர். கூட்டம் முடிந்தபின் அநேக சகோதரிகள் தங்களுடைய வேதனைகளையும், குடும்பத்தில் படும் கஷ்டங்களையும் கூறி கண்ணீர்வடித்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். உண்மையாகவே கர்த்தர் ஏவாளை நோக்கி கூறினபடி “...உன் ஆசை (ஸ்திரீயினுடைய) உன் புருஷனைப் பற்றியிருக்கும்..” (ஆதி.3:16).

இப்படியாக மனைவியினுடைய ஆசை புருஷனைப் பற்றியிருக்கும்போது புருஷனுடைய கடுஞ்சொற்களையோ, கடுமையான நடத்துதலையோ மனைவியினால் தாங்கிக் கொள்ளமுடிவதில்லை. ஏனென்றால் “...மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால்..” (1பேது.3:7) மிகவும் சிறிய சிட்சையைக் கூட தாங்கிக் கொள்ளமுடியாமல் தங்களையே வாழ்நாளெல்லாம் வருத்திக்கொண்டே காலத்தைக் கழிக்கின்றனர். அன்பு சகோதரியே; நாம் ஏன் நம்மை நாமே வருத்திக் கொள்ளவேண்டும்? நம் அருமை சகோதரி மரியாள் நமக்கு மாதிரியல்லவா! “தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் (லூக்.10:42). ஆம், நாம் நம் இயேசு ராஜாவை விட்டு விலகாத நல்ல பங்கை தெரிந்துகொண்டால் மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்க வேண்டியதில்லை. இச்செய்தியினைக் கூறுவது எளிது, செயல்படுத்துவது கடினம் என நீங்கள் நினைக்கலாம். ஆம், நாம் அனைவருமே பெலவீனபாண்டங்கள் தானே, நான் மட்டும் என்ன விதிவிலக்கா? ஆனால், ஒன்று சொல்வேன், நாம் கர்த்தருடைய பாதத்தில் அமரும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் எல்லாமே நமக்கு எளிதாகி விடும். தேவாதி தேவன் அவருடைய சமூகத்தில் நாம் அதிக நேரம்

செலவு செய்யும்போது தம்முடைய வசனங்கள், இன்னும் ஆவிக்குரிய பாடங்கள் மூலம் நமக்கு போதித்து நினைப்பூட்டி நம்மை சரிசெய்வார், ஆறுதல்படுத்துவார், நாசியில் சுவாசமுள்ள யாவரையும் நாம் நம்பி கலங்க வேண்டியதில்லை. எல்லாம் மாயை. இதை எழுதிக் கொண்டிருக்கிற எனக்கு ஒருபாடல் ஞாபகத்திற்கு வருகிறது.

*“மனிதர்கள் அன்பு மாறலாம்*
*மனதார தீங்கும் பேசலாம்*
*அன்பு காணா இதயமே*
*அன்பர் இயேசுவை அண்டிக்கொள்*
*கலங்கும் கர்த்தர் உண்டல்லோ*
*கவலை ஏன் கலக்கம் ஏன்*
*கர்த்தர் இயேசு அழைக்கிறார்*
*எண்ணி எண்ணி உள்ளம் நொந்து*
*அணைக்க இயேசு துடிக்கிறார்”*

இப்பேர்பட்ட மணவாளன் நமக்கிருக்க புல்லைப்போல் ஒழிந்துபோகவிருக்கும் இந்த கொஞ்சகால வாழ்வின் சோதனையை மேற்கொள்ள நம்மால் முடியாதா? ஆவிக்குரிய மணவாளனாகிய நம் இயேசு கிறிஸ்து நம்மை நோக்கி ‘என் பிரியமே , நீ பூரணவதி; உன்னில் பழுதொன்றுமில்லை’ என அழைத்தால் போதும். நியாயத்தீர்ப்பின் நாள் நமக்கு நல்லநாளாக அமைய வேண்டும். அந்நாளில் நாம் குற்றமற்றவர்களாக நியாயாசனத்திற்கு முன் நிற்க வேண்டும். ஏனென்றால் சத்தியபரராகிய இயேசு நம்மை சத்தியத்தின்படியே நியாயந்தீர்ப்பார்.

சத்தியம், சத்தியம் சத்தியத்தையே கடைப்பிடிக்கிறோம் என்று கூறிக் கொண்டு கிரியையில்லாதிருப்போமானால் மிகவும் பரிதபிக்கப்படுவோம். “அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது” என்று யாக்கோபு தனது நிருபத்தில் (யாக்.2:26) எழுதியிருக்கிறதை நாம் அறிவோம். கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நம்மை உலகமட்டுமல்ல, சத்தியத்தைக் கைக்கொள்ளுகிறோம், சத்தியத்தையே போதிக்கிறோம் என்கிறவர்களும்கூட நம் குடும்பங்களில் எப்பொழுது, குழப்பம் வரும், எப்போது நம்முடைய விசுவாசக்கப்பல் உடையும் என ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் கொசுயில்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறார்கள். எனவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்களாகிய நாம் கர்த்தருக்கு முன்பாக மன உண்மையுள்ளவர்களாகவும், நம் ஆவி, ஆத்மா, சரீரத்தில் குற்றமற்றவர்களாகவும் நம்மைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருப்போம். எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக் கொள்வோம்.

கடைசியாக, சகோதரிகளே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணிம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருப்போம். நிச்சயமாகவே ஆவிக்குரிய நம்மணவாளனாகிய இயேசு கிறிஸ்து “என் பிரியமே, ... உன்னில் பழுதொன்றுமில்லை” என்று சொல்லி, “நித்திய விவாகத்துக்கென்று உன்னை

எனக்கு நியமித்துக்கொள்வேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்" (ஓசி.2:19,20) என்று சொல்லி நியாயத்தீர்ப்பின் நாளிலே நம்மை மகிழ்விப்பார்.


"சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்" (ஏசா.29:19). தேவன் தாமே சிறுமையும் எளிமையுமான நம்மை ஸ்திரப்படுத்தி வழிநடத்துவாராக!


## ஆசிரியருக்கு வந்த கடிதங்களில் சில...


**கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அல்லேலூயா!**

அன்புள்ள ஐயா அவர்களுக்கு ஸ்தோத்திரம். தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் பிரதிக்கு ஆண்டு சந்தா ரூபாய் 50/- (ஐம்பது) மணியார்டர் அனுப்பி உள்ளேன். தொடர்ந்து பிரதி அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நாங்களும் தங்களுடைய ஊழியத்திற்காக அநுதினமும் ஜெபித்துக்கொள்கிறோம்.

அன்புடன் சகோதரி,
A.ஜெயராணி டீச்சர்
செம்பட்டி





THE WORD OF CHRIST
D/5 RAJAN NAGAR
BATLA GUNDU
DINDIGUL (DT)
पिन PIN 624202
(इस लाइन के नीचे न तो लिखें और न ही मुद्रित करें Do not write or print below this line)


தங்களின் ஆவிக்குரிய புத்தகங்களை எங்களுக்கு அனுப்ப வையுங்கள்.
தங்களின் தேவ செய்திகளை T.V-யால் தொடர்ந்து பார்த்து வருகிறோம்.
[எ.காக்கின் குடும்பச் செய்திகள் நெஞ்சை தொட்டது]



**ஜெபியுங்கள்**

- நம் இந்திய சுதந்திரம் மீட்டு எடுக்கப்பட...
- தேவன் நம்தேசத்திற்கு ஒரு நல்ல பிரதமரை ஏற்படுத்த...
- விவசாயம் காக்கப்பட...
- உலகமெங்கும் உள்ள இந்தியர்கள் காக்கப்பட...
- வாலிபர்கள் போதை பழக்கங்களிலிருந்து விடுபட...



## வேத அறிவுப்போட்டி எண் 282 ன் விடைகள்

| | |
|---|---|
| 1. அபாரீம் | - எண்.27:12 |
| 2. தெசலோனிக்கே | - 2தெச.1:4 |
| 3. சாலொமோன் | - 1இரா.9:22 |
| 4. ஜெபம் | - 1தீமோ.2:2 |
| 5. 70 | - 2இரா.10:1 |
| 6. தேவவசனமோ | - 2தீமோ.2:9 |
| 7. தாவீது | - 1நாளா.21:25 |
| 8. ஆம் | - தீத்.3:2 |
| 9. ஆகாப், யோசபாத்தை | - 2நாளா.18:3 |
| 10. சரீரத்திற்கேற்ற | - எபி.9:10 |

## வேத அறிவுப்போட்டி எண் 283 ன் விடைகள்

| | |
|---|---|
| 1. எஸ்றா | - எஸ்றா 8:22 |
| 2. யாக்கோபு | - யாக்.2:1 |
| 3. நெகேமியா | - நெகே.5:13 |
| 4. பின்தொடரக் | - 1பேது.3:11 |
| 5. எஸ்தர் | - எஸ்தர் 2:10 |
| 6. ஜாக்கிரதையாயிருக்க | - 2பேது.3:14 |
| 7. யோபு | - யோபு 31:27 |
| 8. தேவனுடைய | - 1யோவா.3:9 |
| 9. எரிச்சலடையாதே, பொறாமை | - சங்.37:1 |
| 10. யோவான் | - 2யோவா.4 |

## வேத அறிவுப்போட்டி எண் 282 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.S.ஜாய் சந்திரகாந்தா | - நல்லூர் |
| 2.Mrs.கிறிஸ்டோபல் | - கோவை |
| 3.J.பிச்சை | - விருதுநகர் |
| 4.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 5.Mrs.பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 6.S.சாந்தகுமாரி | - நாசரேத் |
| 7.Mrs.சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 8.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 9.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 10.Mrs.லலிதாபெவின்சன் | - காரைக்குடி |
| 11.Mrs.பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 12.J.மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 13.Sis.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 14.Mrs.மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 15.Mrs.ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 16.Mrs.ரூபவல்யா | - நாசரேத் |
| 17.J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 18.A.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 19.Mrs.பாலின்டேனியேல் | - சென்னை |
| 20.K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 21.Mrs.அன்னாள் ஜெபகனி | - கோவை |
| 22.E.அதிசயம் | - பனைகுடி |
| 23.R.பாரதி | - கோபி |
| 24.A.விக்டர்பாபு | - பவானி |
| 25.Mrs.ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 26.S.அசோக்குமார் | - தூத்துக்குடி |
| 27.Mrs.ஃபுளோரன்ஸ்சீத்தர் | - சென்னை |
| 28.A.ஜான்தங்கராஜ் | - பாண்டிச்சேரி |
| 29.D.அன்புக்கமலம் | - கோவை |
| 30.Mrs.ஜெயாபானிஜெபராஜ் | - தாம்பரம் |
| 31.Mrs.ஜான்சி | - ஆனைமலை |
| 32.D.ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து,
இரவும் பகலும் அவருடைய வேதத்தில்
தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்"

**சங்கீதம் 1:2**

## வேத அறிவுப்போட்டி எண் 283 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs.ஜெயசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 2.Mrs.லலிதாபெவின்சன் | - காரைக்குடி |
| 3.Mrs.சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 4.D.அன்புகமலம் | - கோவை |
| 5.Mrs.ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 6.S.ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 7.Mrs.கிறிஸ்டோபல் | - கோவை |
| 8.A.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 9.Mrs.ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 10.E.அதிசயம் | - பனைகுடி |
| 11.J.பிச்சை | - விருதுநகர் |
| 12.R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 13.Mrs.ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 14.Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 15.M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 16.R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 17.J.S.ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 18.A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 19.S.செல்வராஜ்சாலொமோன் | - வள்ளியூர் |
| 20.Mrs.பாலின்மார்டின் | - காரைக்குடி |
| 21.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 22.P.சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 23.P.ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 24.Mrs.பாலின்டேனியேல் | - சென்னை |
| 25.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 26.Mrs.ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 27.Mrs.அன்னாள்ஜெபகனி | - கோவை |
| 28.Mrs.பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 29.K.ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 30.Mrs.ஜெயாபானிஜெபராஜ் | - தாம்பரம் |
| 31.K.ஜான்சி | - சென்னை |
| 32.Mrs.ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 33.J.ஜான்சி | - ஆனைமலை |
| 34.Mrs.ஃபுளோரன்ஸ்சீத்தர் | - சென்னை |

# நான் ஒரு கடனாளியாயிருக்கிறேன்

# I am a debtor

*-Roy Dunavin*

**"நான் ஒரு கடனாளியாயிருக்கிறேன்...**
**நான் பிரசங்கிக்க விரும்புகிறேன் .....**
**நான் வெட்கப்படவில்லை."(ரோமர் 1:14-16)**



பவுல் "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிறகடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (ரோம.13:8) என்றான். பவுல் தேவனுடைய கிருபை தன்மேல் பொழிந்தருளினபடியால் திரும்ப செலுத்தக் கூடாததென நித்தியக் கடனாகிய அன்பை அடையாளப்படுத்துகிறார். அவன் நம்பிக்கையற்ற வனாகவும் இழந்து போனவனாகவும் அடையாளப்படுத்துகிறான்" நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோம.7:24). "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; (கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே.2:4.5).

இதை அறிந்துகொள்ளுகிற எந்த மனிதனும் இதே கடமையை உணர்வான். அவன் பவுலுடனேகூட சேர்ந்து, என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1கொரி.9:16) என்பான். தேவன் பவுலை ரோம.7-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சேற்றின் நடுவிலிருந்து தூக்கியெடுத்து இப்பொழுதோ ரோமர் 8-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நிலைமைக்கு அவனை உயர்த்தியிருந்தார். தேவன் அவனை புத்திர சுவிகாரமாக்கியிருந்தார், நீதிமானாக்கியிருந்தார், அவனை ஒருபோதும் பாவம் செய்யாதிருந்தவனைப்போல மாற்றி அவனுக்குத் தம்முடைய சித்தத்தை அறிவித்து சுயாதீனத்தை கொடுத்து அவனை பரலோக ராஜ்யத்தின் பிரஜையாக்கி தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவனை முத்திரித்திருந்தார்.

தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் இதே ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். நாம் நம்முடைய முன்னான நிலைமையை இப்போதைய நிலைமையிலே இருந்து கொண்டு எதிர்ப்போமானால் பவுலோடு சேர்ந்து நாமும், "நான் ஒரு கடனாளியாயிருக்கிறேன், நான் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்று சொல்வோம்"

சிறுவர் பகுதி

# இரண்டாவது முறையாக விற்கப்பட்டவன்

வேத பகுதி: ஆதியாகமம் 37:1-39:5




யோசேப்பு தன் சகோதரர்களாலே மீதியானியரிடத்தில் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவர்கள் அவனை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கஷ்டம் இருந்திருக்கும்! தன் குடும்பம், இடம், நண்பர்கள், உறவினர்கள் எல்லாவற்றையும் இழந்தவனாக மீதியானியரின் கையில் ஒரு கைப்பொம்மையாக அவர்களோடு இருந்தான். அவனுக்கு துன்மார்க்கமான செயல் பிடிக்காது. ஆகையால் 17 வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான். அவன் தகப்பனாகிய யாக்கோபோ முதிர் வயதிலே யோசேப்பு தனக்குப் பிறந்ததினால் தன் பிள்ளைகள் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து அவனுக்குப் பலவருணமான அங்கிகளை செய்து உடுத்துவான். இதையெல்லாம் கண்ட அவன் சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி விற்றுப்போட்டார்கள்.

தங்களுடைய தவறை மறைக்க ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, யோசேப்பின் அங்கியை இரத்தத்தில் தோய்த்து தங்களுடைய தகப்பனிடத்துக்கு அனுப்பி இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ பாரும் என்று சொல்லச்சொன்னார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, என்று புலம்பினான். அந்த மீதியானியரோ யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். முதலாவது தன் சகோதரர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். பின்பு அந்த மீதியானியர் போத்திபாருக்கு விற்றுப்போட்டார்கள். இதை கண்ட யோசேப்பு எப்படி மனங்கசந்து அழுதிருப்பான் என்பதை சற்று தியானித்துப்பாருங்கள். கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவன் எகிப்து தேசத்திலே உயர்த்தப்பட்டான்.

அப்படியே உங்களோடும் கர்த்தர் இருக்க நீங்கள் விரும்பினால் இந்த யோசேப்பைப் போல துன்மார்க்கத்துக்கு விலகி நலமான காரியத்தைச் செய்யுங்கள். கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. உங்கள் நிமித்தம் உங்களுடைய தேசம், உங்களுடைய வீடு ஆசீர்வதிக்கப்பட யோசேப்பைப் போல மாறுங்கள்.

**மனப்பாட வசனம்**

“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே” - சங்.119:9

## வேத அறிவுப் போட்டி எண்: 285

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. உன் பட்டயத்தை நீ திரும்ப அதின் உறையிலே போடு என்று எந்த தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானது?
2. தோமாவின் மற்றொரு பெயர் என்ன?
3. அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்: அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும் என்ற ராஜா யார்?
4. எவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்கு சொல்ல வேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்?
5. நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்லப்படுவதற்குப் பதிலாக நீங்கள் யாருடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்?
6. உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா?
7. எருசலேம் பரிசுத்தமாயிருக்கும்; அந்நியர் இனி அதைக் கடந்து போவதில்லை என்று எந்த தீர்க்கதரியைக் கொண்டு பேசினார்?
8. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களா?
9. பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன் என்று கர்த்தர் எந்த வம்சத்தை குறிப்பிடுகிறார்?
10. ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவர் எவர்?

## வேதாகம ஆய்வு... 69

### தரியு ஐஸ்தாஸ்பிஸ்
### Darius Hystaspes

1. பெர்சியாவை ஆண்ட மகா சக்கரவர்த்தி
2. இவன் காலத்தில் சகரியா தீர்க்கதரிசனம் உரைத்தார் – சகரி.1:1
3. தரியுவின் காலத்தில் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது – எஸ்றா 6:15
4. கிறிஸ்து ஆலயத்தைக்கட்டுவார் என்ற தீர்க்கதரிசனம் – சகரி.6:12,13
5. சர்வாங்க தகனபலிகளையிட தேவைகளை கொடுத்து உதவினான் – எஸ்றா 6:9



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
May 2024



கிறிஸ்துவுக்குள்ளாக புதிதாக பிறந்த மூவரோடு
அவர்களை வழிநடத்திய பொன்னுசாமி ஊழியர் மற்றும் நமது ஆசிரியர்
இடம்: கெத்சமனே கார்டன் வத்தலக்குண்டு



இப்புத்தகம்
உங்களுக்கு தேவையானால்
இன்றே எழுதிப்
பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முழு முகவரியை
SMS மூலம் அனுப்பியும்
பெற்றுக்கொள்ளலாம்
63793 50509

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



மத்தேயு 17:1–9

இயேசுவானவர் தமது சீஷர்களுக்கு முன்பாக மறுரூபமான இடம் இது

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan